**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 345/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா.1** |
| Name : | **திருமதி. இந்திராணி** |
| Father's Name/Husband Name: | **திரு. லோகநாதன்** |
| Village : | அரும்பாவூர் |
| Taluk : | **வேப்பந்தட்டை** |
| Age : | 54 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.09.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரிகள் 1, 2, 3 ஆஜர்)**
**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகள் அனைவரையும் தெரியும். கடந்த 07.05.2019 அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் நான் என் வீட்டு வாசலில் வெளியே என் பேத்திக்கு சாப்பாடு ஊட்டிக்கொண்டிருந்தேன். என் மகன் காதல் திருமணம் செய்து கொண்டான். எங்கள் ஊர் வழக்கப்படி கிராமத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையை நாங்கள் கொடுக்க வேண்டும். வீடு கட்டிக் கொண்டிருந்ததால் அந்த தொகையை எங்கள் கிராமத்திற்கு கொடுக்க முடியவில்லை. பின்னர் அந்த தொகையை ஊர் முக்கியஸ்தார் அண்ணாதுரையிடம் கொடுக்க பிள்ளையார் கோவிலுக்கு போனேன். அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த அண்ணாதுரை எதற்காக வந்தாய் என்று என்னிடம் கேட்டதற்கு நான் பணம் கொடுக்க வந்த விபரத்தை சொன்னேன். வீட்டிற்கு போய் விட்டு மாலை வரச் சொல்லி என்னை அனுப்பிவிட்டார். அன்று மாலை 6 மணியளவில் பணம் கொடுக்க சென்ற போது ஆளில்லை நாளைக்கு வா என்று சொல்லி மறுபடியும் என்னை அனுப்பி விட்டார். அன்று மறுநாள் இரவு 8 மணியளவில் நானும் எனது கணவரும் பணம் கொடுக்க பிள்ளையார் கோவிலுக்கு சென்றோம். ரொம்ப நேரம் நான் நின்று

கொண்டிருந்தேன் அவர் என்னவென்று கேட்கவில்லை. பிறகு பணம் கொண்டு வந்த விபரத்தை நானே சொன்னேன். பிறகு வாங்கிக்கலாம் என்று தெனாவட்டாக சொன்னார். என் கணவர் தொடர்ந்து இதே போல் பணம் வாங்காமல் அலைகழிக்கிறீர்களே என்று கேட்டதற்கு எதிரி அண்ணாதுரை என்னையும் என் கணவரையும் பார்த்து எங்க வேணும்னாலும் சென்று ஊம்பி பாருங்கன்னு அசிங்கமான வார்த்தையால் திட்டினார். எதுவும் பேச வேண்டாம் என்று, நாங்கள் நேராக அரும்பாவூர் காவல் நிலையத்திற்கு சென்று, போலிசாரிடம் நடந்த விபரத்தை சொல்லி புகார் கொடுத்தோம். போலிசார் காலையில் வரச்சொல்லி விட்டார். அந்த தேதி எனக்கு ஞாபகமில்லை. பின்னர் மறுநாள் 07.05.2019ம் தேதி இரவு சுமார் 8.30 மணிக்கு என் வீட்டிற்கு முன்பாக என் பேத்திக்கு சாப்பாடு ஊட்டிக்கொண்டிருந்தேன். காவல் நிலையத்தில் போலிசார் எதிரிகளை விசாரணை செய்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அதனால் எதிரிகள் அன்று எதிரிகள் அண்ணாதுரை மற்றும் ஆரியமலை ஆகியோர்கள் சேர்ந்து கொண்டு தேவிடியா இங்க முடியாதுன்னு சொல்லிட்டு அங்க போய் என்னா சொல்லிட்டு வந்த என்று திட்டினார்கள். அதற்கு நான் இது பொது பிரச்சனை என்னுடையதும், அண்ணாதுரைக்கும் சம்மதப்பட்டது. உனக்கு இது சம்மந்தம் இல்லை என்று ஆரியமலையிடம் சொன்னேன். எதிரி சூர்யா என்பவர் சைக்கிள் செயினை கையில் எடுத்து வந்து எனது கணவரை கையால் தள்ளிவிட்டார். கையில் வைத்திருந்த சைக்கிள் செயினை சுற்றி எனது தலையில் இடது பக்கத்தில் அடித்து விட்டார். அதன் பின்னர் அருகில் உள்ளவர்கள் என்னை அரும்பாவூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தார்கள். எதிரி சூர்யா என்னைக்கு இருந்தாலும் உனக்கு இதுல தாண்டி உயிர் போகும் என்று கூறினார்.அரும்பாவூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க முடியாது என்று கூறி என்னை 108 ஆம்புலன்சு மூலம் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் உள்நோயாளியாக சிசிச்சையில் இருந்தேன். மறுநாள் காலை 9 மணியளவில் மருத்துவமனையில் வைத்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணையில் நடந்த விபரத்தை நான் சொன்னேன். நான் கொடுத்த வாக்குமூலத்தை படித்து பார்த்து சரியாக இருந்ததால் நான் அதில் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் புகார்

வாக்குமூலம் நான் அளித்தது தான். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் நீதிமன்றத்தின் முதல் நிலை சாட்சியத்தில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் அளித்த புகாரில் சம்பவத்தை யாரெல்லாம் பார்த்தார்களா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை அடிக்க பயன்படுத்திய சைக்கிள் செயினை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மருத்துவமனையில் என்னை மருத்துவர் விசாரித்த போது இரும்புக்கம்பியால் எதிரி என்னை தாக்கியதாக கூறியுள்ளேன் என்றாலும், தற்போது நீதிமன்றத்தில் சைக்கிள் செயின் என்று மாற்றி சொல்லி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் 4 தெரிந்த ஆண் நபர்கள் அடித்ததாக மருத்துவமனை விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் போது அங்கு எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்றால் 5 நபர்கள் இருந்திருப்பார்கள். எதிரிகள் ஆபாச வார்த்தைகளால் பேசியதால் அங்கிருந்த நபர்களுக்கு அறுவருக்கத்தக்கதாகவும், சச்சரவாகவும் இருந்தது என்று நான் எனது புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி என்னை சைக்கிள் செயின் காட்டி என்னைக்கு இருந்தாலும் உன் உயிர் என் கையில் தாண்டி போவும் என்று கூறியதால் எனக்கு உயிர் பயம் வந்து பயந்துவிட்டேன் என்று புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு இரத்தம் படிந்த ஆடையினை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. சைக்கிள் செயினால் அடித்திருந்தால் எனது கபால மண்டை உடைந்திருக்கும் என்றாலும், நானே தவறி கீழே விழுந்துவிட்டு அந்த காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.